மாத்திரத்திலே திடுக்கிடும் உறுப்பினர்கள் யாராகயிருந்தாலும் உடனடியாக அந்தத் துறைக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்து, பார்த்தேன், மனம் துணுக்குற்றேன். உடனடியாக அந்தச் சிலையைப் பராமரித்து சீர்திருத்துங்கள் என்று சொல்வதுதான் முறை.

* 107 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether Police Guards have been sanctioned for guarding all the statues in Madras City; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், நம் மாநிலத்தில் பலவிடங்களில் பல சிலைகள் இருக்கின்றன. ஒரு நினைவுச் சின்னமாகவும், பெரிய அறிஞர்கள், மற்றவர்கள் என்ற முறையிலே இந்தச் சிலைகளை நாம் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போது சிலை வைக்கும்பொழுது சில இடங்களில் அந்த இடங்கள் வைப்பதற்கு லாயக்கில்லை என்ற ஆட்சேபனைகள் கிளம்புகின்றன. ஆகவே, சிலை வைக்கத் தகுதியான இடங்கள் எவை எவை என்று மாநில அரசு சர்வே செய்து நிச்சயப்படுத்துவது நல்லதாக அமையும் அல்லவா? அத்துடன். இந்தச் சிலைகளை வைத்ததற்குப் பின்பு வாரம் ஒரு முறையாவது பராமரிக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது நல்லது அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முன்கூட்டியே எங்கெங்கு சிலைகள் வைக்கலாம் என்று அப்படி வரையறை செய்வது என்பது இயலாத காரியம். முக்கியமானவர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக்கும், விடுதலை வீரர்களுக்கும் சிலைகளை வைக்க வேண்டுமென்று எண்ணும்பொழுது அது எந்த இடத்திலே அமைய வேண்டுமென்று நினைப்பவர்கள் அந்த இடத்தைக் குறித்துக் கேட்பார்களேயானால், அதை அந்தத் துறையினர் ஆலோசித்து அந்த இடம் இல்லாவிட்டாலும், வேறு எந்த இடத்திலே வைக்கலாம் என்ற அளவிற்கு அதைப்பற்றிச் சிந்தித்து முடிவெடுப்பார்கள். வாரம் ஒருமுறை பராமரிப்பது என்பது அல்ல. ஏனென்றால் வாரம் ஒருமுறை பராமரிக்க வேண்டுமென்றால் இடையிலேகூட அம்மையார் அவர்கள் குறிப்பிட்டதுபோல ஏதாவது தவறுகள் அந்தச் சிலைகளின் மீது நடைபெறக்கூடும். அடிக்கடி பராமரித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான் முறை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, போலீசார் காவல் காக்கும் அளவிற்கு இந்த நாட்டில் குற்றம் புரிந்தவர்கள், புரிகின்றவர்களுடைய சிலைகள் ஏதாவது சென்னையிலே இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**1971 ஜூலை 2]**

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** குற்றம் புரிந்தவர்களுடைய சிலை மீதுதான யாரும் பாய்கிறார்கள் என்று அல்ல. 27—4—1970 அன்று சென்னை கோட்டைக்கு அருகிலுள்ள 7-ஆம் எட்வர்ட் சிலை மீது தார் ஊற்றப்பட்டிருந்தது. அதையொட்டி சில முக்கியமான தலைவர்களின் சிலைகளுக்கு அந்த நேரத்தில் பாதுகாப்புப் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, சென்னை நகரத்திலுள்ள சிலைகளுக்குக் காவல்துறையின் காவல் இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு, மவுண்ட் ரோட்டில் வைக்கப்பட்டிருக்கும் சிலைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் பங்கம் விளைவிக்க காங்கிரஸ்காரர்கள் முயற்சித்தது பற்றி இந்த மன்றத்திலே பல முறை எழுப்பப்பட்டிருக்கிறது. அண்ணா அவர்கள் உயிரோடு இருக்கும்போதே ஊர்வலம் நடத்தி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** எனவே அதற்குப் போலீசாரின் காவல் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மூலக்கேள்வி சென்னை மாநகரிலுள்ள சிலைகளனைத்தையும் காவல் புரிய காவலர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதாகும். அதனால் தான் இல்லை என்று, அனைத்திற்கும் இல்லை என்று சொன்னேன். மதுரையிலே அண்ணா சிலை வைத்தபொழுது ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளையொட்டி அதன் விளைவாக நடக்கக்கூடாத நிகழ்ச்சி எதுவும் நடந்து விடக்கூடாது என்பதற்காகச் சென்னையில் திரு. காமராஜர் அவர்களின் சிலைக்கும், அண்ணா அவர்களின் சிலைக்கும் சிறப்புக் காவல் போடப்பட்டது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இப்படிச் சிலைகள் வைத்து அவற்றிற்கு நாம் பாதுகாப்பும் ஏற்படுத்த வேண்டியிருப்பதாலும், சிலைகளெல்லாம் ஒரு காலத்தில் போற்றப்பட்டு, மறு காலத்தில் அதனால் பல சிக்கல் ஏற்படுவதாலும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சிந்தித்து, மற்றவர்களுடைய அபிப்பிராயம் எப்படியிருப்பினும், அவர்கள் தனிப்பட்ட அபிப்பிராயத்தில் சிந்தித்து சிலைகள் வைக்கும் கொள்கையைக் கைவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முஸ்லீம் மதத்தில் சிலைகள் வைப்பது மரபு அல்ல. ஆகவே அதையொட்டி மற்ற மதக்காரர்களும் நடந்து கொள்வது இயலாத காரியம்.

**திரு. அ. சின்னசாமி :** தலைவரவர்களே, 1965-ம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாண்ட இராஜேந்திரனுக்குச் சிலை வைக்க அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு எதிரே மாணவர்கள் நன்கொடை திரட்டி அந்தச் சிலையை வைத்திருக்கிறார்கள்.

[1971 ஜூலை 2

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, கம்பர் சிலையை நாங்கள் வைக்கிறோம் என்று யாராவது முன்னுக்கு வந்து, பின் வாங்கினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வாங்கினார்கள்.

*Tube wells for rural areas.*

* 108 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have decided to implement a programme with UNICEF assistance for provision of drinking water in scarcity and cholera affected villages in the State;

(*b*) if so, the details of the programme;

(*c*) the number of tube-wells that are proposed to be sunk and the number to be located in cholera affected areas and in scarcity areas during the period 1971 to 1976 and the rate per year; and

(*d*) the depth of each well?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:

(அ) ஆம்.

(இ) & (உ) 22—9—1970-ஆம் நாளிட்ட கிராம வளர்ச்சி-உள்ளாட்சித்துறை அரசாணை எண். 1827-இல் குடிநீர்த்தட்டுப்பாடுள்ள கிராமங்களிலும், காலராவால் பாதிக்கப்பட்ட கிராமங்களிலும் 8,850 குழாய்க் கிணறுகள் இறக்குவதற்கான ஒரு திட்டத்துக்கு இவ்வரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்திலுள் கடினமான பாறைகள் அமைந்த பகுதிகள் அனைத்தும் அடங்கியுள்ளன; இத்திட்டம், 'யுனிசெஃப்' நிறுவனம் வழங்கும் உதவியை கொண்டு ஐந்தாண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றப்படும். 'யுனிசெஃப் நிறுவனத்தின் உதவி துளையிடுக் கருவிகள், மற்றும் ஏனைய இன்றியமையாச் சாதனங்களின் வடிவில் கிடைக்கும். 8.850 குழாய்க் கிணறுகளை இறக்கி அவற்றைப் பேணுவதற்கு ஆகும் செலவு ரூ. 2.71 கோடி எனது மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ரூ. 2.71 கோடி தொகையில், பணியாளர் செலவும் வண்டிகளைச் செலுத்தி வருவதற்கான கட்டணமும் அடங்காது. (நெடுஞ்சாலைகள், கிராமப்பணிகள்) தலைமைப் பொறியாளரிடம் மேற்படி திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1971-72-லிருந்து ஆண்டொன்றுக்கு 1.770 குழாய்க் கிணறுகள் வீதம் இத்திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

**குழாய்க் கிணறுகளின் மொத்த எண்ணிக்கை 8850**

| | | |
|---|---|---|
| காலராவால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இறக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிணறுகள் .. .. .. .. .. | 528 | 8838 அல்லது |
| குடிநீர்த் தட்டுப்பாடுள்ள பகுதிகளில் இறக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிணறுகள் .. .. .. .. .. | 8310 | 8850 (சுமாராக) |

(எ) தரைமட்டத்துக்குக் கீழே 150 அடி.